1971 டிசம்பர் 17]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, அப்போதும் அப்படித்தான் பல புகார்கள் வந்தன. எனவே, அதிர்ஷ்டம் உள்ளவர்களுக்குக் கிடைக்கட்டுமே என்பதற்காகத்தான் சீட்டுக் குலுக்கிப் போட்டு, விசைப்படகுகளை வழங்குகிறோம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, 'யான்மார்' படகுகளைத்தான் மக்கள் விரும்புகிறார்கள். யான்மார் கொடுக்கப்படுவது நிறுத்தப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படி நிறுத்தி வைக்கப்பட்டதற்கான காரணம் என்ன? மக்கள் எதை விரும்பி வாங்குகிறார்களோ அதைக் கொடுப்பதுதானே நியாயம். மீண்டும் யான்மார் படகு கொடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, 'யான்மார் இறக்குமதி செய்யப்படுவது நிறுத்தப்பட்டிருக்கிறது. 'யான் மார்' படகு ஜப்பான் கொலாபரேஷனுடன் எண்ணூரில் கட்டலாமா என்கிற யோசனை நீண்டகாலத்திற்கு முன்னால் இருந்து மத்திய அரசாங்கத்தின் ஒப்புதல் கிடைக்காததால் அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் நம்முடைய அரசு அதுபற்றி முயற்சி எடுத்து வருகிறது. தற்போது யான்மார் படகு இறக்குமதி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

*511 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், நாகையில் உள்ள மீன்பிடி விசைப்படகுக் கட்டும் நிலையத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: ஆம்.

தருமபுரி மாவட்ட அரிசன கூட்டுறவு பேருந்து போக்குவரத்து நிறுவனம்

*512 வினா—டாக்டர் ச. அ. சின்னராசு: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்ட அரிசன கூட்டுறவு பஸ் போக்குவரத்து நிறுவனத்திடமிருந்து, கடன் கோரி அரசுக்கு மனு ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) இல்லை. ஆனால் தருமபுரி மாவட்ட அரிசன கூட்டுறவு பஸ் போக்குவரத்து நிறுவனத்திற்காக கீழ்க்கண்ட உதவிகள் கோரி ஒரு கோரிக்கை மாநில கூட்டுறவு பதிவாளரிடமிருந்து, 7—3—1971-ல் அரசுக்கு அந்தது:

(1) மூன்று பேருந்துகள் வாங்குவதற்காக நீண்டகால வட்டியுடன் கூடிய கடன் ரூ. 2,00,000.

(2) கருவிகள் வாங்குவதற்காகவும், தொழிற்கூடம் கட்டுவதற்காகவும் அரசின் பங்குத் தொகை ரூ. 50,000.

(3) நிறுவனத்தின் செயலாளராகப் பணிபுரிய ஒரு கூட்டுறவுத் துணைப் பதிவாளரின் சேவை (அரசின் செலவில்).

(4) பங்குத் தொகைக்காகவும் நெருக்கடி நிதிக்காகவும் ரூ. 20,000.